

*Wahlaufruf für den Integrationsausschuss >*

NEUSS.DE

**ஒருங்கிணைந்து முன்னேற்றும் அலுவலகர் தேர்தலுக்கு அழைக்கிறார்**

மிகவும் மதிப்பிற்குரிய குடியேற்ற வரலாற்றைக் கொண்ட நொய்ஸ் நகர ஆண் பெண் குடியிருப்பாளர்களே,

30. வைகாசி 2021 அன்று ஒருங்கிணைந்து முன்னேற்றும் சபைக்கான தேர்தல் மீளவும் நடைபெறவுள்ளது. இது நேரடியாகத் தெரிவுசெய்யப்படும் 12 நொய்ஸ் ஆண் பெண் குடியேற்றவாசிகளின் பிரதிநிதிகள் மற்றும் 6 நகரசபை உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். இதன் ஆட்சிக்காலம் ஐந்து வருடமாகும். இந்த ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட சபையில் அனைத்து உறுப்பினர்களும் ஒழுங்கான முறையில் குடியேற்றவாசிகளின் சமத்துவமான சந்தர்ப்பங்கள், சமஉரிமையாகப் பங்கெடுப்பது மற்றும் பல்வேறு தற்போதைய சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திகள் குறித்துக் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்வார்கள். இந்த அமைப்பு நொய்ஸ் நகரத்தில் வாழும் ஆண் பெண் குடியிருப்பாளர்களான உங்கள் பிரதிநிதிகளாகப் பங்கேற்பதுடன், உங்கள் எதிர்காலத்தை சிறப்புடன் ஒன்றுகூடி அமைப்பதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தும்.

உங்கள் வாக்கும் எண்ணப்படும்: உங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதுடன் வாக்களிக்கச் செல்லுங்கள், உங்கள் வாக்குரிமை ஊடாக அரசியலில் உங்கள் குரலை சேர்ந்து ஒலிக்கச் செய்வதுடன் நகர அரசியலில் நீங்கள் சேர்ந்து செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்!

**எங்கு தேர்தல் இடம்பெறும் மற்றும் நான் எப்படி வாக்களிக்கலாம்?**

நொய்ஸ் நகரப் பிரதேசம் இந்த மீள் தேர்தலுக்காக ஐந்து தேர்தல் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது, அவற்றில் தேர்தல் ஞாயிறு அன்று அங்குள்ள தேர்தல் வாக்குநிலையங்களில் வாக்கை வழங்குவதற்கான வாக்குப்பெட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்.

ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அனைத்து வாக்குநிலையங்களும் தடைகளற்று நுழைவதற்கு உகந்ததாக இருக்கும். உங்களுக்குப் பொறுப்பான வாக்கு நிலையம் குறித்து உங்கள் தேர்தல் பத்திரங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

**ஒருங்கிணைந்து முன்னேற்றும் சபைக்கான தேர்தலுக்கு வாக்குரிமையுடையவர்கள், யார்**

- சட்டவிதி 116 பந்தி 1 அடிப்படைச் சட்டத்தின் பிரகாரம் ஜேர்மன் பிரஜைகள் அல்லாதோர் அதாவது வெளிநாட்டு பிரஜாவுரிமை உடையவர்கள்,
- யேர்மன் பிரஜாவுரிமையை ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிவின் மூலமாகப் பெற்றவர்கள் அல்லது
- வெளிநாட்டுப் பெற்றோருக்கு பிள்ளையாக உள்நாட்டில் பிறந்ததன் மூலம் ஜேர்மன் பிரஜாவுரிமையை பெற்றவர்கள், இதன்போது இவர்களின் பெற்றோரில் ஒரு பகுதி ஆகக்குறைந்தது 8 வருடங்கள் தனது வழமையான தங்குமிடத்தை உள்நாட்டிலும், காலவரையறை அற்ற வதிவிட அனுமதியையும் கொண்டிருக்க வேண்டும்.

**மேலதிகமாக தேர்தல் நாளான 30. வைகாசி 2021 அந்த நபர்,**

- ஆகக்குறைந்தது 16 வயதானவராகவும், அதாவது 30. வைகாசி 2005 முன்பாகப் பிறந்தவராக இருத்தல் வேண்டும்,
- இவர் ஆகக்குறைந்தது ஒருவருட காலமாக யேர்மன் பிரதேசத்தில் சட்டரீதியாக தங்கியிருத்தல் வேண்டும் மற்றும்
- ஆகக் குறைந்தது தேர்தலுக்கு 16 நாட்களுக்கு முன்பாக இருந்து நொய்ஸ் இல் உள்ள பிரதான வீட்டில் அல்லது தனியான வீட்டில் வசித்தல் வேண்டும்.

**தேர்தலுக்குத் தகுதியில்லாத வெளிநாட்டு ஆண்கள் பெண்கள்,**

- தஞ்சக் கோரிக்கையாளர்கள் அல்லது
- வதிவிடச் சட்டத்தில் அதன் சட்டவிதி § 1 பந்தி 2 இல 2 மற்றும் 3 ற்குள் அடங்காதவர்கள்.

தகுதியான வாக்காளர்கள் அடிப்படை ரீதியாக தானாகவே நொய்ஸ் நகர வாக்காளர் இடாப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் 26. சித்திரை 2021 தொடக்கம் 05. வைகாசி 2021 வரை முக்கிய தகவல்கள் அடங்கிய அதாவது எப்போது, எவ்வாறு மற்றும் எங்கு நீங்கள் வாக்களிக்கலாம் என்ற தேர்தல் தகவல்களைப் பெற்றுக்கொள்வீர்கள்.
யாராவது தான் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானவர் என நம்பியிருந்து, ஆகப்பிந்தியது 09. வைகாசி 2021 வரை தேர்தல் தகவல்கள் கிடைக்காதிருந்தால், தயவுசெய்து இயன்றவரை விரைவாக நொய்ஸ் நகர தேர்தல் திணைக்களத்தைத் தொடர்பு கொள்ளவும். மேலதிக தகவல்களை (உ-ம். தபால் வாக்களிப்பு) நொய்ஸ் நகர இணையத்தள தேர்தல் தளத்தில் நீங்கள் காணலாம்:
https://www.neuss.de/rathaus/wahlportal

உங்கள்
Deniz Elbir
பன்முகத்தன்மை, ஒருங்கிணைத்தல் மற்றும் இனப்பாகுபாட்டிற்கு எதிரான நொய்ஸ் நகரப் பிரதிநிதி

**STADT NEUSS**
*Im Auftrag*
Beauftragter für Diversität, Integration und Antirassismus
Deniz Elbir M.A.
Markt 2
41460 Neuss
Tel.: 02131 90-5750
deniz.elbir@stadt.neuss.de

NEUE DEUTSCHE STADTGESELLSCHAFT

STADT NEUSS